# யாரஸூலல்லாஹ் என அழைக்கலாமா? - Shall we Call Yarasoolallah?

*In Urdu:* **Moulana Moulvi Allama Mufti Ahamed YarKhan Radiallahu Anhu.**

*உர்து மூலம்:* **மௌலானா மௌலவி அல்லாமா முப்தி அஹ்மது யார்கான் ரஹிமஹுல்லாஹ் அவர்கள்**

*In Tamil:* **Moulana Moulvi Al-Haj S.M.H. Muhammad Ali Saifudeen Rahmani Baqavi Sufi Quadiri.**

*தமிழில்:* **மௌலானா மௌலவி அல்ஹாஜ் S.M.H.. முஹம்மது அலிசைபுத்தீன் ரஹ்மானி பாகவி ஸூபி காதிரி அவர்கள்**

## யாரஸூலல்லாஹ் என அழைக்கலாமா?

பெருமானார் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை,அருகாமையில் இருந்துக் கொண்டோ அல்லது தூரமாக இருந்துக் கொண்டோ யாரஸூலல்லாஹ் என்று அழைப்பது ஆகுமாகும். இது அவர்களது ஜீவிய காலத்திலானாலும் சரி, வபாத்திற்குப் பின்னாலானாலும் சரி, தனி நபர் அழைத்தாலும் சரி அல்லது கூட்டமாக அழைத்தாலும் சரி, எவ்விதமானாலும் ஆகுமானதே.

இது பற்றிய பிரச்சனைக்கு இரண்டு பாடங்களை அமைக்கின்றோம்.

**முதல் பாடம்: 'யா ரஸூலல்லாஹ்' என அழைப்பது ஆகுமென்பது பற்றி.**

**இரண்டாம் பாடம்: பிரதிவாதிகள் தொடுக்கும் ஆட்சேபணைகளும் அதற்கான தக்க பதில்களும்.**

## முதல் பாடம்

நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை இவ்வாறு அழைக்கலாமென்பது, திருக்குர்ஆன் மூலமும், அமரர்கள், சங்கைமிகு சஹாபாக்கள் செயல்கள் மூலமும், சமுதாய கண்மணிகளின் வழக்காறுகளின் மூலமும் ஊர்ஜிதமாகியுள்ளது.

வான் மறையாம் திருக்குர்ஆனில் அனேகமான இடங்களில், 'யாஅய்யு ஹன்னபிய்யு - நபிஅவர்களே! யாஅய்யு ஹர் ரஸூலு- இறைத்தூதரே! யா அய்யுஹல் முத்தத்திறு-போர்வை போர்த்தியவரே!' போன்ற அழகிய அடைமொழிப் பெயர்களைக் கொண்டு பெருமான் நபிகள் கோமான் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அழைக்கப்பட்டுள்ளார்கள்.

முந்தைய நபிமார்கள், யா மூஸா, யா ஈஸா, யா யஹ்யா, யா இப்றாஹீம், யா ஆதம் போன்று நேரடி பெயர்களைக் கொண்டு அழைக்கப்பட்டனர்.

பாமர முஸ்லிம்கள் கூட யா அய்யுஹல்லதீன ஆமனு - விசுவாசம் கொண்டவர்களே! என்று அழைக்கப்பட்டுள்ளார்கள்.

(பிறரை 'யா' என்ற பதம் கொண்டு அழைக்கலாமென்பது இவைகள் மூலம் ஊர்ஜிதமாயிற்று எனினும் ஒவ்வொருவரையும் அழைப்பதற்கு வழக்காறில் வெள;வேறு விதமிருக்கின்றது.

அதனடிப்படையில், முந்தைய நபிமார்களை எல்லாம் பெயர் சொல்லி அழைத்த இறைவன், மரியாதைக்காக பெருமான் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பெயர் சொல்லி குர்ஆனில் எவ்விடத்திலும் அழைக்காது ஒரு தனிவழியை வகுத்துள்ளான்.) இதைப் போன்று நாம் பெருமானரை அழைப்பதற்கான வழியை இறைவன் அவனது திருமறையில் எடுத்தியம்புகிறான்.

லாதஜ் - அலூ – துஆஅர்ரஸூலி – பய்னக்கும்.....

உங்களில் சிலர் சிலரை அழைப்பது மாதிரி ரஸூலை அழைப்பதையும் உங்களுக்கு மத்தியில் ஆக்கிவிடாதீர்கள். (24-63)

ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை முற்றிலும் அழைக்கக் கூடாது என்று இவ்வசனம் தடை செய்யவில்லை. அடுத்தவர்களை (பெயர் சொல்லியோ, மரியாதைக் குறைவாகவோ) அழைப்பது போன்று பெருமானாரை அழைக்காதீர்கள் என்றுதான் தடை விதித்துள்ளது.

உத்வூஹும் - லி ஆபாயிஹிம்...

அவர்களை அவர்களது தகப்பன்களுடன் (இணைத்து இன்னாரின் மகனே! என்று) அழையுங்கள். (33-5)

பெருமானாரின் வளர்ப்பு மகனாக வளர்ந்து வந்த ஜெய்துப்னு ஹாரிதா ரலியல்லாஹு அன்ஹு அவர்களை பெருமானாரின் மகனே! என்றழைக்காமல் ஹாரிதாவின் மகன் ஜெய்தே! என்றழையுங்கள் என்று இவ்வசனம் அறிவுறுத்துவதால் (தேவைக்கு) பிறரை அழைக்கலாமென்பது இவ்வசனம் மூலம் தெளிவாகின்றது.

இது போன்றே, காபிர்களுக்கும் கூட அவர்களது சுவாமிகளை உதவிக்கழைக்க திருக்குர்ஆன் அனுமதிக்கின்றது.

வத்வூ- ஷுஹதா அக்கும் - மின்தூனில்லாஹி.

(உங்களது வாதத்தில்) நீங்கள் உண்மையாளர்களாக இருந்தால் அல்லாஹ் அல்லாத உதவியாளர்களை அழைத்துக் கொள்ளுங்கள். (2-23)

பெருமான் நபியின் பொன்மொழிகள் திரட்டான 'மிஷ்காத் ஷரீப்' எனும் நூலின் முதல் ஹதீதில் கூட 'யாமுஹம்மது அக்பிர்னீ – அனில் -இஸ்லாம் -முஹம்மதுவே! இஸ்லாத்தை பற்றி அறிவிப்பீராக!' என்று ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் வினவியதாக வந்துள்ளது.

பெருமனார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வபாத்தாகும் சமயம் ஜப்ரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் 'யா முஹம்மது! உங்களை மேன்மையாகவும், கண்ணியப்படுத்தவும் என்னை உங்கள்பால் அல்லாஹ் அனுப்பியுள்ளான்' என்று கூறிய நீண்டதொரு ஹதீது மிஷ்காத் 546-ம் பக்கத்தில் காணப்படுகிறது.

உதுமானிப்னு ஹனீப் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கின்றார்கள்-; கண் தெரியாத ஒருவர் பெருமானாரின் சமூகம் வந்து (குருட்டுத் தன்மை நீங்க) துஆபிரார்த்தனை கற்று தரும்படி வேண்டினார். அதுபோழ்து பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், கீழ்காணும் துஆவை அவருக்கு கற்றுக் கொடுத்தார்கள். (அதன்பின் அவருக்கு கண் குருடு நீங்கியதாகவும், அதன்படி துஆ கேட்ட பலருக்கு குருடு சுகமாகியதாகவும் அறிவிப்புகள் அனந்தம் வந்துள்ளன.)

இறைவா! ரஹ்மத்துடைய நபியான முஹம்மது (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் பொருட்டைக் கொண்டு உன்னளவில் முன்னோக்குகின்றேன். முஹம்மதுவே! எனது இந்த ஹாஜத் - தேவையை நீங்கள் நிறைவுபடுத்த எனது இரட்சகனளவில் உங்களைக் கொண்டு முன்னோக்குகின்றேன். இறைவா! என்னில் அவர்களது ஷபாஅத்தை ஏற்றுக் கொள்வாயாக! (ஆதார நூல்: இப்னு மாஜா)

'இந்த ஹதீது, ஸஹீஹான ஹதீதாகும்' என அபூஇஸ்ஹாக் ரஹிமஹுல்லாஹ் அவர்கள் கூறியுள்ளார்கள்.

இந்த (அபூர்வமான) துஆ, கியாமத் நாள் வரையிலான அனைத்து முஸ்லிம்கட்கும் கற்றுத் தரப்பட்டுள்ளது. அத்துடன் அதில், 'யா முஹம்மது' என்ற அழைப்பும், (அவர்களிடம்) உதவி தேடுதலும் அமைந்துள்ளன. பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை ஜியாரத் செய்யும்போது 'அஸ்ஸலாமு அலைக்க- யா நபியல்லாஹ் - அஷ்ஹது அன்னக ரஸூலுல்லாஹ் - இறை தூதரே! உங்கள் மீது சாந்தி நிலவுக! நீங்கள் இறைத்தூதர் என சாட்சி பகர்கின்றேன்' என்றும், அபூபக்கர் நாயகம் ரலியல்லாஹு அன்ஹு அவர்களை ஜியாரத் செய்யும் போது, அஸ்ஸலாமு அலைக்க யா கலீபத்த ரஸூலில்லாஹ், அஸ்ஸலாமு அலைக்க யா ஸாஹிப ரஸூலில்லாஹ்- இறைத்தூதரின் பிரதிநிதியானவர்களே! உங்கள் மீது சாந்தி உண்டாவதாக! (குகையில் இறைதூதருடன்) தோழராக இருந்தவர்களே! உங்கள் மீது சாந்தி உண்டாவதாக! என்றும், உமர் நாயகம் ரலியல்லாஹு அன்ஹு அவர்களை ஜியாரத் செய்யும் போது,

அஸ்ஸலாமு அலைக்க யா அமீரல் முஃமினீன், அஸ்ஸலாமு அலைக்க யா முழ்ஹிரல் இஸ்லாம், அஸ்ஸலாமு அலைக்க யா முகஸ்ஸிரல் அஸ்னாம்- விசுவாசிகளுக்கு தலைவரானவர்களே! உங்கள் மீது சாந்தி உண்டாவதாக! இஸ்லாத்தை பிரகடனப்படுத்தியவர்களே! உங்கள் மீது சாந்தி உண்டாவதாக!! கற்சிலைகளை உடைத்தெறிந்தவர்களே! உங்கள் மீது சாந்தி உண்டாவதாக!! என்றும் கூற வேண்டுமென்று

பதாவா அலம்கீரி முதல் பாகம் ஹஜ்ஜுடைய பாடத்திலும், (ஏனைய எல்லா பிக்ஹு கிரந்தங்களிலும்) காணப்படுகின்றது.

இதில் பெருமானாரை அழைப்பதும், அவர்கள் அண்மையில் துயில் கொள்ளும் அபூபக்கர் நாயகம், உமர் நாயகம் ஆகியோர்களை அழைப்பதும் இருக்கின்றன. சான்றோர்கள், இறைநேசச் செல்வர்கள், குருநாதாக்களின் துஆக்கள், வழீபாக்கள், தொகுப்புகளில் 'யாரஸூலல்லாஹ்' என்ற அழைப்பு இடம் பெற்றிருப்பதை அனந்தனந்தமாக காணலாம்.

(எடுத்துக் காட்டிற்கு அவைகளில் சில:-) 'யா அக்ரமல் கல்கி... படைப்பினங்களில் மிக சங்கைக்குரியவரே! பொதுப் பீடைகள் வந்து விடியும்போது உங்களை தவிர்த்து வேறு யாரிடம் நான் ஒதுங்குவேன்?' என்று புர்தா ஷரீபில் இமாம் பூஸரி ரஹிமஹுல்லாஹு அவர்களும்,

'யாரஹ்மத்தன் - லில் ஆலமீன்.... உலகப் பேரருளாக வந்த நாயகமே! அநியாயக்காரர்களின் கையில் சிக்குண்ட ஜெய்னுல் ஆபிதீனுக்கு உதவி புரியுங்கள்!' என்று இமாம் ஜெய்னுல் ஆபிதீன் ரலியல்லாஹு அன்ஹு அவர்களும், 'உலகத்தாரின் உயிர் வேற்றுமையிலேயே போய் விடுகின்றது. கிருபை செய்யுங்கள் யாநபியல்லாஹ்! கிருபை செய்யுங்கள்! உலகப் பேரருளாக தாங்கள் இருக்கும்போது நாங்கள் முடிவில் துர்பாக்கியசாலிகளாகுவோமோ? என்ன?' என்று அல்லாமா மௌலானா ஜாமி ரஹிமஹுல்லாஹ் அவர்களும்,

'யாஸய்யிதஸ் ஸாதாத்தி... சான்றோர்க்கெல்லாம் தலைவரானவர்களே! நான் உங்களை நாடி வந்துள்ளேன். உங்களது பொருத்தத்தை ஆதரவு வைத்துள்ளேன். என்னையும் உங்களது பாதுகாப்பில் காத்திடுங்கள்!' என்று இமாமல் அஃலம் அபூஹனீபா ரஹிமஹுல்லாஹ் அவர்களும் மிக அருமையாகவும், பரவசமாகவும் பாடிக் களித்துள்ளனர்.

இப்பாடல்களிலெல்லாம் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை அழைத்தலும், அவர்களிடம் உதவி வேண்டுதலும், மறைவுக்குப் பின், அதுவும் வெகு தொலைவிலிருந்து விளித்தலும் இடம் பெற்றிருக்கின்றன.

உலக முஸ்லிம்கள் அனைவரும் தொழுகையில், அஸ்ஸலாமு அலைக்க அய்யுஹன்னபிய்யு வரஹ்மத்துல்லாஹி வபரகாத்துஹு - நபி அவர்களே! உங்கள் மீது சாந்தி நிலவுக! அல்லாஹ்வின் அருளும், பாக்கியமும் உண்டாவதாக! என்று பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை அழைத்து வருகின்றனர்.

இவ்வாறு அழைத்து சலாம் சொல்வது ஒவ்வொரு தொழுகையிலும் வாஜிப்- கடமையாகும். இது பற்றி இமாம்களின் விரிவான வாக்கியங்களை 'ஹாழிர், நாழிர்' சம்பந்தமாக வரையும்போது மேற்கோள் காட்டியுள்ளோம்.

(இதுவரை கூறிவந்த ஆதாரங்களை உற்று நோக்குங்கால் தனி நபர்கள் 'யாரஸூலல்லாஹ், யாரஸூலல்லாஹ்' என்றழைப்பது ஆகுமானதுதான் என்றாகிவிட்டது. அதுபோழ்து பலர்கூடி சப்தமிட்டு அழைப்பது ஆகுமென்பது ஊர்ஜிதமாகும்.

தனித்தனியாக ஆகுமென்றிருக்கும் காரியங்கள் அவை கூட்டானாலும் ஆகுமானதாகவே இருக்கும். (உதாரணம்) பிரியாணி எனும் உணவு ஹலால்-ஆகுமானது. தனியாக இருக்கும்போது ஹலாலான பொருள்களின் கூட்டுத்தானே பிரியாணி என்ற பெயர் பெற்றது. ஆகவே பிரியாணி எனும் உணவு ஹலாலாகும்.

இதுபோல் தனியாக யாரஸூலல்லாஹ் என்று அழைப்பது ஆகுமென்றாகும்போது பலர்கூடி அழைக்கலாமென்பதைப் பற்றி தெளிவாக திவ்விய ஹதீது ஷரீபிலும் வந்துள்ளது.

பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஹிஜ்ரத்தை மேற்கொண்டு மதீனா நன்னகருக்குள் புகுந்த போது, ஆண்களும் பெண்களும் மாடிகள் மீது ஏறிக் கொண்டு, இளம் சிறார்கள், பணியாட்கள் வீதிகளில் நின்றுக் கொண்டு 'யா முஹம்மது - யாரஸூலல்லாஹ், யா முஹம்மது, யாரஸூலல்லாஹ்' என்று வரவேற்பு கொடுத்தனர் என ஹழ்ரத் பரஃ ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவித்துள்ளார்கள். (நூல்: முஸ்லிம்)

இவ்வறிவிப்பின்படி 'யாரஸூலல்லாஹ்' என்று கூவி அழைப்பது ஆகுமென்பது தெளிவாகிவிட்டது. எல்லா சஹாபாக்களும் இதை செய்துள்ளனர் என்பதும் தரிபடுகின்றது.

மாண்புமிகு நபித்தோழர்கள், பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வருகையை முன்னிட்டு வரவேற்பு விழா கொண்டாடிய விபரம் ஹிஜ்ரத்தின் இதே ஹதீதில் வந்துள்ளது. பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வெளியூருக்கு விஜயம் செய்துவிட்N;டா அல்லது போர்க் களத்திற்குப் போய்விட்டோ மதீனா நன்னகருக்கு வருகை தந்தருளும் போதெல்லாம் வழி நெடுக நின்று ஆரவாரமாக வரவேற்பார்கள். அதை அன்று பெரும் குதூகலமான விழாவாகவும் கொண்டாடி மகிழ்வார்கள். (மிஷ்காத்-புகாரி)

தொழுகை என்பது, இறை தியான கொண்டாட்டம் ஒரே இடத்தில் நடைபெறுகின்றது. ஹஜ்ஜும் இறை தியான கொண்டாட்டம் தான். இங்குமங்கும் போவதும், வருவதும் சுற்றுவதும், தொங்கோட்டமாகவும் நடைபெறுகின்றது. அமைதியை விளைவித்திடும் 'தாபூத்' எனும் பெட்டகத்தை அமரர்கள் (மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களின் கூட்டத்தினர்கட்கு) கூட்டம் கூட்டமாக இறக்கி பெரும் விழாவாக கொண்டாடியது குர்ஆன் மூலம் தரிப்பட்டுள்ளது.

பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அகிலத்திற்கு அவதாரமாகும் பொழுதும், விண்ணுலக பயணத்தின் போதும் அமரர்கள் பெரும் திரளாக விஜயம் செய்து விழாக் கோலம் பூண்டுள்ளார்கள்.

நல்லவற்றை எடுத்தோதுவது நன்மையை பயக்கும். ஆகவே இப்படி விழாக்கள் நடத்துவது அதிலும் பெருமானாரை அழைப்பதும், வாழ்த்துவதும் நன்மையை நல்கும்.

## இரண்டாம் பாடம்

### 'யாரஸூலல்லாஹ்' என்றழைப்பது பற்றி பிரதிவாதிகளால் தொடுக்கப்படும் ஆட்சேபணைகளும், அதற்கான தக்க பதில்களும்:

**கேள்வி:** 'உமக்கு பயனோ இடரோ அளிக்க முடியாத அல்லாஹ் அல்லாதவற்றை அழைக்காதீர்' (10:106) என்று திருக்குர்ஆன், அல்லாஹ் அல்லாதவர்களை அழைப்பதை தடுத்துள்ளது.

'அல்லாஹ் அல்லாதவர்களில் நின்றும் அவர்களுக்கு பயனோ இடரோ கொடுக்க முடியாதவற்றை அவர்கள் அழைக்கின்றனர்' என்று குர்ஆன் கூறுவதால் அல்லாஹ் அல்லாதவர்களை அழைப்பது விக்ரஹ ஆராதனைக்காரர்களின் வேலையாகுமென்பது ஊர்ஜிதமாகின்றது? (அல்லவா?)

**பதில்:** எவ்விடத்திலும் இவை, இவை போன்ற வசனங்கள் வந்தாலும் அவைகளில் வரும் 'துஆ' என்பதற்கு 'அழைத்தல்' என்ற பொருள் கொள்ளக் கூடாது. (சில தப்லீஹ் தலைவர்கள் தமது கொள்கையை நிலைநாட்ட இப்பொருளை கையாண்டுள்ளனர்) வணங்குதல் என்ற பொருளைத்தான் கொள்ள வேண்டும். 'வணக்கம்' என்ற பொருளைத்தான் இவ்விடங்களில் வழங்கியிருப்பதை (வேண்டுமானால் உலகளாவி அனைவர்களது கரங்களில் தவழ்ந்து கொண்டிருக்கிற) தப்ஸீர் ஜலாலைன் மற்றும் தப்ஸீர்களை பாரீர்!

அது மட்டுமல்ல, 'வணக்கம்' என்ற பொருள் தான் கொள்ள வேண்டுமென (அவைகளின் பின் தொடர் வசனங்களும்) 23:117ம் வசனமும் இதர வசனங்களும் உறுதுணையாக அமைந்திருக்கின்றன.

'வணக்கம்' என்ற பொருள் கொள்ளாவிடின் நாம் முதற் பாடத்தில் எடுத்துக் காட்டிய, அல்லாஹ் அல்லாதவர்களை அழைக்கப்பட்டுள்ள திருக்குர்ஆன் வசனங்கள், ஹதீதுகள், உலமா பெருமக்களின் சொற்கள் எல்லாம் ஷிர்க்காக ஆகிவிடும். உயிருள்ளவர்களை அழைப்பது அல்லது மரணித்தவர்களை அழைப்பது, அருகிலுள்ளவர்களை அழைப்பது, எல்லாம் 'ஷிர்க்'காக அல்லவா ஆகிவிடும்?

அன்றாடம் ஒவ்வொருவரும் தத்தமது சகோதர, சகோதரிகளை, அன்பர்களை, உயிர் நேசர்களை அழைத்த வண்ணமாக இருக்கின்றனரே! அப்படியானால் உலகில் எவரும் ஷிர்க்கை விட்டும் தப்பி வாழ முடியாதே!

அல்லாஹ்வுடைய தாத்தை (தத்சொரூபத்தை) போன்று அல்லது சிபத் (இலட்சணத்)தை போன்று வேறொரு பொருள் இருக்கிறது என்று (மனதால்) நிர்ணயம் கொள்வதற்குத்தான் 'ஷிர்க்' என்று (சுன்னத் வல் ஜமாஅத்தினர்) சொல்கின்றனர்.

அல்லாஹ் அல்லாதவர்களை அழைக்கின்றபோது மேற்கண்ட நிர்ணயம் வருவதில்லையே! பின்னர் ஷிர்க் எப்படி வரும்?

**கேள்வி:** 'நின்றவர்களாகவும், உட்கார்ந்தவர்களாகவும் விலாவின் மீது (படுத்தவர்களாகவும்) அல்லாஹ்வை (திக்ரு) நினையுங்கள்(4:102) என்று குர்ஆன் கூறுகின்ற போது, எழுந்திருக்கும் போதும், உட்காரும் போதும் அல்லாஹ் அல்லாதவர்களின் பெயரை கூறுதல் ஷிர்க்காகும். எனவே அல்லாஹ்வின் பெயரைத்தானே நினைக்க வேண்டும்?

**பதில்:** ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை நினைப்பது ஹராம் என்றோ அல்லது ஷிர்க் என்றோ இவ் வசனத்திலிருந்து விளங்குவது (அவனது) அறியாமையாகும்.

நீங்கள் தொழுகையை நிறைவேற்றி முடித்து விடுவீர்களாயின் எந்நிலையிலும் எவ்விதத்திலும் இறையோனை நினைத்திடலாம் என்பதைத்தான் இவ்வசனம் சொல்லி கொண்டிருக்கிறது.

அதாவது:- 'ஒழு' இன்றி தொழுக முடியாது. தொழுகையில் ருகூவு, ஸஜூது, இருப்புகளில் குர்ஆனை ஓத முடியாது, தொழுகையில் (சங்கடம் இருந்தால் தவிர) விலாப்புறம், முதுகுப்புறம் படுத்துக் கொள்ள முடியாது என்பது போன்ற விதிமுறைகள் தொழுகையில் இருக்கின்றன.

ஆனால் தொழுகையை முடித்து விட்டால் இவ்விதி முறைகள் எல்லாம் போய் விடும். இதுபோழ்து, நின்றவண்ணம், படுத்தவண்ணம், உட்கார்ந்தவண்ணம் எந்நிலையிலும், எவ்விதத்திலும் இறைவனை நினைக்க முடியும் என்பதைத்தான் இவ்வசனம் அறிவிக்கின்றது.

சிந்தனைக்கோர் விருந்து இவ்வசனத்தில் சிந்திப்பதற்குரிய விஷயங்கள் உண்டு.

1. ஃபத்குருல்லாஹ்... என்ற ஏவல் வாஜிபு - கட்டாயம் என்பதற்கில்லை. ஜாயிஸ் - ஆகுமென்பதற்குத்தான். நினைத்தால் அல்லாஹ்வை நினையுங்கள் அல்லது அல்லாஹ் அல்லாதவர்களை நினையுங்கள் அல்லது மௌனமாக இருங்கள் எது வேண்டுமானாலும் செய்யலாமென்பதை காட்டுகின்ற ஏவல் வினையாகும்.

2. அப்படியே வாஜிபு என்ற ஏவல் வினைதான் என்று வைத்துக் கொண்டாலும் 'திக்ருல்லாஹ் - அல்லாஹ் நினைத்தல் என்பதற்கு 'திக்ரு ஙைரில்லாஹ் - அல்லாஹ் அல்லாதவர்களை நினைத்தல்' என்பது நகீழ் - எதிர்பதமாகாது. ஏனெனில், அல்லாஹ்வை நினைத்தல் வாஜிபாகுமானால் அல்லாதவர்களை நினைப்பது ஹராம் என்றாகிவிடும் (எவரும் இதை சொல்லவில்லை) எனவே 'திக்ருல்லாஹ் - அல்லாஹ்வை நினைத்தல் என்பதற்கு, 'அதமு திக்ரில்லாஹ் - அல்லாஹ்வை நினைக்காமல் இருத்தல் என்பதுதான் சரியான நகீழ் -எதிர் பதமாகும்.

3. அல்லாஹுவை நினைத்தல் (திக்ருல்லாஹ்) என்பதற்கு எதிர் பதம், அல்லாஹ் அல்லாதவர்களை நினைத்தல் (திக்ரு ஙைரில்லாஹ்) என்பதை ஒப்புக் கொண்டாலும் ஒரு எதிரிடை வாஜிபாகுவதினால் மற்றது ஹராமாகலாம், ஷிர்க் ஆக முடியாது.

ஹராம், வாஜிபு, பர்ளு என்பதெல்லாம் (உறுப்புகளினால் செய்யப்படும்) சிபத்துல் பிஃலு - தொழிற் பண்புகளாகும். தொழிலில்லாத - அதமுல் பிஃலியின் பண்புகளில்லை என்பதையும் சிந்தையுள் வைக்க வேண்டும்.

4. பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை நினைப்பது எதார்த்தத்தில் இறைவனை நினைப்பதுதான்.

'எவர் ரஸூலுக்கு வழிபடுகின்றாரோ அவர் அல்லாஹ்வுக்கு நிச்சயம் வழிப்பட்டு விட்டார். (அல்-குர்ஆன் 4:80)

கலிமா, தொழுகை, ஹஜ், குத்பா - பிரசங்கம், பாங்கு உட்பட எல்லா வணக்கங்களிலும் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை நினைவு கூறுவது பின்னிப் பிணைந்தும், அத்தியாவசியமாகவும் இருக்கும் போது தொழுகைக்கு வெளியில் எழுந்திருக்கும் போதும் உட்காரும்போதும் நினைவு கூறுவது எப்படி ஹராமாகும்? குனிந்தாலும், நிமிர்ந்தாலும் எந்நிலையிலும், எந்நேரமும் பெருமானார் அவர்கள் மீது ஸலவாத்து ஓதிக் கொண்டே இருக்கிறான் ஒருவன் அல்லது 'லாயிலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் ரஸூலுல்லாஹி என்ற கலிமா ஓதிக் கொண்டே இருக்கிறான் என்றால் இது நன்மையான காரியம்தானே.

5. தப்பத் யதா-அபீலஹபின்.... அபூலகபின் இரு கரமும் நாசமாகுக!' என்பதையும், (முனாபிகீன்களின் வரலாறு நிறைந்திருக்கும்) முனாபிகீன் சூராவையும் இன்னும் எவ்வசனங்களில் காபிர்களின் கற்சிலைகளின் கூற்று வந்துள்ளதோ அவ்வசனங்களையும் ஓதுவது அல்லாஹ்வை திக்ரு - நினைப்பதாக ஆகுமா? இல்லையா? இவையனைத்தும் இறையோனின் திவ்விய வாக்கியமாகும் அல்லவா? வாக்கியங்களுக்குரிய நற்கூலி ஓதுபவர்களுக்கு கிடையாதா? இறையோனின் திருவாக்கியங்களை - வசனங்களை ஓதுவது, நினைப்பது இறையோனை நினைப்பதாகாதா? என்ன?

இறையோனின் பேரருளை, அவனது பேரொளியை முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை நினைப்பது இறைவனை நினைப்பதாகாதா?

'காலபிர் அவ்னு – பிர் அவ்னு சொன்னான்' என்பது குர்ஆனில் இடம் பெற்றுள்ள திருவசனம் ஆனதினால் 'கால' என்று ஓதினால் மூன்று எழுத்திருப்பதினால் முப்பது தவாபும், 'பிர்அவ்னு' என்று ஓதினால் ஐந்து எழுத்திருப்பதினால் ஐம்பது தவாபும் கிடைக்கும். இது போழ்து 'முஹம்மதுர் ரஸூலுல்லாஹ்' என்றால் முஷ்ரிக்காகி விடுவானா? என்ன (விந்தையான) ஆராய்ச்சி? ஹழ்ரத் யஃகூபு நபி அலைஹிஸ்ஸலாம் நிலையிலும், இருப்பிலும், எந்நிலையிலும், எந்நேரமும் 'யூசுப் - யூசுப்' என்று சொல்லிக் கொண்டே இருந்தார்கள் (தல்லாஹி - தப்தவு - தத்குரு - யூசுப் - யூசுபை நினைத்துக் கொண்டே யஃகூபு இருந்தார்கள் 12-85 என்று இறைவனும் கூறியுள்ளான்) யூசுப் நபியின் நினைவால் அழுது அழுது கண்கள் கூட வெண்ணிறமாகி விட்டன. அவ்விதமாக ஹழ்ரத் ஹவ்வா அலைஹிஸ்ஸலாம் அவர்களது பிரிவால் ஹழ்ரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் 'ஹவ்வா ஹவ்வா' என்றும், இமாம் ஹுஸைன் ரலியல்லாஹு அன்ஹு அவர்களது இழப்பால், இமாம் ஜெய்னுல் ஆபிதீன் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள், 'ஹுஸைன் ஹுஸைன்' என்றும் ஜெபித்துக் கொண்டும் நினைத்துக் கொண்டும் இருந்திருக்கிறார்கள்.

'தந்தையை இழந்து பரிதவிக்கும் என்நிலை, யஃகூபு அலைஹிஸ்ஸலாம் அவர்களது நிலையை காண குறைந்ததில்லை. அவர்களோ செல்வ மகனை இழந்தார்கள். நானோ பெற்ற தந்தையை

இழந்திருக்கிறேன்' எனும் பாடல் ஜெய்னுல் ஆபிதீன் ரலியல்லாஹு அன்ஹு அவர்களது சோக காட்சியை பிரபலித்துக் கொண்டிருக்கிறது.

சொல்லுங்கள்! பார்ப்போம். இவர்கள் எல்லாம் இணை வைத்த முஷ்ரிக்குகளா என்ன? இல்லையெனில்,

ஆஷிக் - அன்பன் தன் (உயிருக்கும் மேலான) நபியை நினைத்தால் முஷ்ரிக்காகி விடுவது ஏன்? வியாபாரி இரவு பகலாக தன் வியாபார நினைவில் கிடப்பான். மாணவன் இரவுபகலாக எந்நேரமும் பாட நினைவில் இருப்பான். இன்னவர்களும் அல்லாஹ் அல்லாதவற்றை அல்லவா நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் முஷ்ரிக்குகளாவதில்லையே ஏன்?

**குறிப்பு:** பஞ்சாப்தேனோ நகரில் நமக்கும், மௌலவி தனாவுல்லாஹ் அமரதஸ்ரீ அவர்களுக்கும் 'யாரஸூலல்லாஹ் என அழைப்பது' சம்பந்தமாக ஓர் வாக்குவாதம் ஏற்பட்டது. அப்போது தனாவுல்லாஹ் சாஹிபு அவர்கள் இதே திருக்குர்ஆன் (4:102) வசனத்தை முன் வைத்தார்கள்.

மூன்று கேள்விகள் மட்டுமே நாம் அவரிடம் வினவினோம்.

1. திருக்குர்ஆனில் அம்று - ஏவல் வினை எத்தனை அர்த்தத்திற்கு வருகின்றது?

இவ்வசனத்தில் என்ன அர்த்தத்திற்கு உபயோகிக்கப்பட்டுள்ளது?

2. ஒரு நகீழ் - எதிரிடை வாஜிபாகுவதால் மாற்று நகீழும் ஹராமாகுமா? அல்லவா?

3. திக்ருல்லாஹ்-அல்லாஹ்வை நினைப்பதற்கு எதிர்பதம் என்ன? திக்ரு ஙைரில்லாஹ் - அல்லாஹ் அல்லாதவற்றை நினைப்பது எதிர்பதமா? அல்லது

அதமு திக்ரில்லாஹ் - அல்லாஹ்வை நினைக்காமல் இருப்பது' எதிர்பதமா? எது?

அவர் சொன்ன பதில் இதோ!

தாங்கள் கேள்விகளில் உஸூலுல் பிக்ஹு - பிக்ஹு மூலாதார விஷயத்தையும், மன்திக் இல்மையும் புகுத்தி விட்டீர்கள். இந்த இரண்டு கல்வியுமே 'பித்அத்'தானவை. அதாவது: இவ்விரண்டு கல்வியை கற்றுக் கொள்ளாது மடையனாக இருப்பது சுன்னத் என்பது அவர் கருத்து.

அதன்பின், அப்படியானால், 'மீலாது ஷரீப் கொண்டாடுவது' ஹராம் என்றும், ஹதீதுக் கலை வல்லுனர்கள் ஹதீதுகளை (சேகரித்து) எடுப்பது சுன்னத் என்றும் வரவேண்டுமே. அத்தகைய விளக்கம் பொதிந்திருக்கும்படியான சரியான தஃரீபைவரை இலக்கணத்தை, 'பித்அத்' என்பதற்கு கூறுங்கள் பார்க்கலாம்' என்று அவரிடம் வினா தொடுத்தோம். இவ்வினா இன்றளவும் அவர்முன் வைக்கப்பட்டே இருக்கிறது. அவரும் ஜீவித்துக் கொண்டிருக்கிறார். எவராவது அவரிடம் சென்று பதில் வாங்கி நமக்களித்தால் நாம் நன்றிக்குரியவராக இருப்போம்.

அந்தோ பரிதாபம் !!! பதில் தராமலே மரணித்து விட்டார். அவரது அபிமானிகளாவது அல்லது அவரது கொள்கை வேந்தர்களாவது பதில் அளித்து அவரது ஆத்மா சாந்தியடைய செய்யட்டுமே.

**கேள்வி:-** எங்களுக்கு 'அத்தஹிய்யாத்'தை அஸ்ஸலாமு அலைக்க அய்யுஹன்னபிய்யு - வரஹ்மத்துல்லாஹி வபரகாத்துஹு - என்று நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கற்றுத் தந்தார்கள்.

பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மௌத்தானபோது 'அஸ்ஸலாமு - அலன்னபிய்ய்p' என்று சொன்னோம் என்ற ஹதீது புகாரி ஷரீப் இரண்டாம் பாகம், கிதாபுல் இஸ்தி ஃதான் பாபுல் அக்தி பில்யதைன் எனும் பாடத்தில் ஹழ்ரத் இப்னு மஸ்ஊது ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

'முன்னிலைக்குரிய - காபை' வைத்து அஸ்ஸலாமு அலைக்க என்று பெருமானாரின் ஜீவிய காலத்தில் அவர்கள் (ஸஹாபாக்கள்) சொன்னார்கள். (பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் மறைந்ததும் முன்னிலையை விட்டு விட்டார்கள்' படர்க்கையின் வார்த்தையைக் கொண்டு

'அஸ்ஸலாமு அலன்னபிய்யி' என்று புகாரி ஷரீபின் விரிவுரையான ஐனியில் கூறப்பட்டுள்ளது.

எனவே பெருமானாரின் ஜீவிய காலத்தில் 'அஸ்ஸலாமு அலைக்க' என்று சொல்வது இருந்தது. அவர்களது வபாத்திற்குப்பின் அத்தஹிய்யாத்தில் கூட அழைக்கப்படுவதை விட்டு விடப்பட்டுள்ளது என்று இந்த ஹதீதுவின் மூலமும் விரிவுரையின் வாசகங்கள் மூலமும் தெரிய வருகிறது.

ஸஹாபாக்கள் அத்தஹிய்யாத்தில் கூட இவ்வாறு அழைப்பதை அகற்றி விட்டிருக்கும்போது, எவன் தொழுகைக்கு அப்பால் 'யாரஸூலல்லாஹ்' என்பது போன்றவற்றை கூறுவானாயின் அவன் முற்றிலும் முஷ்ரிக்காகி விடுவானே?

**பதில்:-** புனித புகாரி ஷரீப், அதன் விரிவுரையான ஐனி எனும் நூற்களின் வாசகங்கள் (வினா தொடுத்த) உங்களுக்கு கூட எதிராக வந்துள்ளது ஏன்? இன்று எந்த முஜ்தஹிதான இமாம் அத்திஹிய்யாத்தை மாற்ற உத்தரவிடவில்லையே!

இமாம் அபூஹனீபா ரஹிமஹுல்லாஹ் அவர்கள் ஹழ்ரத் இப்னு மஸ்ஊது ரலியல்லாஹு அன்ஹு அவர்களுடையவும், இமாம் ஷhபிஈ ரஹிமஹுல்லாஹ்

அவர்கள், ஹழ்ரத் இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுடையவும் அத்தஹிய்யாத்தை தெரிவு செய்திருக்கிறார்கள். அவர்களது இரு அத்தஹிய்யாத்திலும் 'அஸ்ஸலாமு அலைக்க அய்யுஹன்னபிய்யு' என்றுதான் இருக்கிறது.

னைறு முகல்லிது - இமாம்களை பின் தொடராதவர்கள் தானயி கூட்டத்தினர்களானாலும் - கஜ்னவி குழுவினர்களானாலும் இதே முன்னிலையிலுள்ள அத்தஹிய்யாத்தை தான் ஓதி வருகின்றனர்.

எனவே சில சஹாபாக்கள் தங்களது இஜ்திஹாதினால் அத்தஹிய்யாத்தை மாற்றியுள்ளார்கள். மர்பூஆன பெருமானாரின் பக்கம் சேர்பிக்கப்பட்ட ஹதீதுக்கு எதிராக இந்த இஜ்திஹாதை அமல் படுத்த முடியாது. மாற்றியமைத்த இந்த சில சஹாபாக்களும் கூட, மறைவாக இருக்கும்போது முன்னிலையாக அழைப்பது ஹராம் என்ற தோரணையில் மாற்றிடவில்லை. காரணம், பெருமான் நபியின் ஜீவிய காலத்திலும் வெகு தொலைவில் வசித்த சஹாபாக்கள் கூட, இதே முன்னிலையான அத்தஹிய்யாத்தைதான் ஓதி வந்தனர்.

இறுதியாக எமன், கைபர், மக்கா முகர்ரமா, நஜ்து இராக் போன்ற எல்லா இடங்களிலும் தொழுகை நடைபெறும் பொழுதும் அதே அத்தஹிய்யாத்தை ஓதி வந்துள்ளார்கள். அத்தஹிய்யாத்தில் அழைப்பவர் எங்கோ ஒரு தொலைவில் இருந்துக் கொண்டு அழைக்கிறார். பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மதீனா நன்னகரில் உறைவிடம் கொண்டுள்ளார்கள். இப்படி அழைப்பதை நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தடுக்கவும் இல்லை. இப்படியானதொரு சந்தேகமும் ஸஹாபாக்களுக்கு எழவுமில்லை.

பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அத்தஹிய்யாத்தை கற்றுக் கொடுக்கும்போது இந்த அத்தஹிய்யாத்து எனது ஜீவிய காலம் மட்டும் ஓத வேண்டிய அத்தஹிய்யாத்து எனது வபாத்திற்கு பின் ஓதப்பட வேண்டிய அத்தஹிய்யாத்து வேறு இருக்கிறது என்றும் சொல்லவில்லை. 'இதனால் முன்னிலையான அத்தஹிய்யாத்தை மாற்ற வேண்டிய அவசியமில்லை.

எனவே அச்சில ஸஹாபாக்களை இதில் பின் தொடர வேண்டியதில்லை. அப்படி இல்லையாயின் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களே 'எனது வாத்திற்குப்பின் என்னை முன்னிலையாக்காதீர்கள்' என்று சொல்லியிருப்பார்கள்.

எனவே இதுபோழ்து முன்னிலையானதை வைப்பதுவே மிக ஏற்றமானது. அஸல் தஃலீமில் இவ்வாறுதான் உள்ளது என்று (தப்லீக் ஜமாஅத் தலைவர்களில் ஒருவரான ரஷிது அஹ்மது கங்கோஹி) பதாவா ரஷிதிய்யா முதல் பாகம் 17-ம் பக்கத்தில் எழுதியுள்ளார்.

பதிலின் சுருக்கம்:- சஹாபாக்கள் சிலரின் இச்செயல் ஆதாரமாக அமையாது. இல்லையெனில் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது பரிசுத்த ஜீவிய காலத்திலும் கூட (ஸஹாபாக்களிடையே) 'ஷிர்க்' நடந்திருக்கிறது. அதை அவர்கள் தடுக்காது விட்டு வைத்திருக்கிறார்கள் என்று வந்துவிடும். அப்படி மாற்றிய ஸஹாபாக்கள் சிலர்தான். பலர் அல்லர் என்றாலும், 'இப்னு மஸ்ஊது ரலியல்லாஹு அன்ஹு அவர்களது சொல்' அபூ அவானா ரலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய அறிவிப்பாகும். ஆனால் புகாரி நாயகத்தின் அறிவிப்பு சரியானது. அதில் அது இப்னு மஸ்ஊது அவர்களது சொல் அல்ல என்று விபரிக்கப்பட்டுள்ளது.

அது அந்த அறிவிப்பாளின் உரையாகும். அதன் எதார்த்தமானது 'சலாமுன் யஃனி அலன்ன பிய்யி' என்பதுதான். பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது ஜீவிய காலத்தில் எந்த சலாம் இருந்ததோ அதே சலாம் தான் அவர்களது வபாத்திற்குப் பின்பும் நீடித்திருந்தது என்ற கருத்துக் கொள்ளவும் முடியும் என்ற அரியதொரு விளக்கத்தை 'மிர்காத்' எனும் நூலில் அல்லாமா முல்லா அலிகாரீ ரஹிமஹுல்லாஹ் அவர்கள் கூறுகிறார்கள்.

ஆகவே அத்தஹிய்யாத்தை ஸஹாபாக்கள் ஒரு போதும் மாற்றவில்லை என்றும், இது அறிவிப்பாளரின் விளக்கத்தில் ஏற்படட்ட விளைவு அசல் சம்பவத்தில் இது இல்லை என்றும் தெரிய வருகிறது. (எனவே மேற்கண்ட வினாவுக்கு அடிப்படையே இல்லாமல் போய் விடுகிறது)

**கேள்வி:-** தொலைவிலிருந்து நபியையோ, வலியையோ அழைக்கும் போது, நமது இச்சப்தத்தை அவர்கள் கேட்கின்றனர் என்று எண்ணம் கொண்டு அழைக்கக் கூடாது. அதனால் ஷிர்க்கு வந்து விடும். காரணம் தொலைவிலுள்ள சப்தத்தை கேட்பது இறைவனின் ஸிபத் - இலட்சணமாகும். அல்லாஹ் அல்லாதவர்கட்கு இத்திறன் உண்டு என நம்புவது ஷிர்க்காகும்.

இந் நிர்ணயமின்றி 'யாரஸூலல்லாஹ்' 'யா கௌது' போன்றவற்றை கொண்டு அழைப்பது ஆகுமாகும். 'தென்றல் காற்றே! கேள்!' என்று சொல்லும்போது தென்றல் காற்று நமது இவ்வழைப்பை கேட்கிறது என்ற நினைப்பு வருவதில்லை தானே. அது போன்று தான் என சில வஹ்ஹாபிகள் சொல்கின்றனர். இன்றைய பொது வஹ்ஹாபிகளும் இதையே காரணமாக காட்டுகின்றனர். (தப்லீக் தலைவர்களில் ஒருவரான) ரஷிது அஹ்மது கங்கோஹியும் தமது பதாவா ரஷிதிய்யாவிலும் இதர நூற்களிலும் இதற்கு ஊக்கமளித்துள்ளார்.

**பதில்:-** தொலைவிலுள்ள சப்தத்தை கேட்பது அல்லாஹ்வின் ஸிபத் -இலட்சணம் என்பது அறவே இல்லை, தொலைவிலிருந்து அழைப்பவனுக்கு தூரமாக தெரிந்தாலும் அல்லாஹ்வுக்கு தொலை தூரம் என்பதில்லை. உயிர் நரம்பை விட மிக சமீபமாக இருக்கிறான்.

'நஹ்னு – அக்ரபு - இலைஹி – மின் ஹப்லில் வரீதி – நாம் அவனளவில் அவனுடைய பிராண நரம்பை விடவும் அதிகமாக நெருங்கி இருக்கிறோம்' என்றும், 'வஇதா - ஸஅலக - இபாதி - அன்னி – என்னை குறித்து என்னுடைய அடியார்கள் (நபியே) உம்மை கேட்பார்களேயானால் நான் சமீபமாக இருக்கிறேன் (என்று நீர் சொல்லும்) என்றும்,

'வ நஹ்னு – அக்ரபு - இலைஹி.......... (மரண தருவாயிலிருக்கிற) அவனிடம் நாம் உங்களைக் காண அதிக முடுகுதலாக இருக்கிறோம். ஆனால் நீங்கள் அதைப் பார்ப்பதில்லை என்றும் இறைவனே சொல்லியிருக்கிறான். எனவே அவனே சமீபமாக இருப்பதினால் எல்லா சப்தங்களும் அவனுக்கு சமீபமானவைகளாகவே இருக்கின்றன. அவன் சமீபமாகவே கேட்கிறான்.

தொலைவிலுள்ள சப்தத்தை கேட்பது, இறைவனது இலட்சணம் என்று ஒப்புக் கொண்ட போதிலும் சமீபத்திலுள்ள சப்தத்தை கேட்பதும் அவனது இலட்சணம்தானே! ஆகவே அருகாமையிலுள்ளவர்களையும் இந்த நமது அழைப்பை சப்தத்தை கேட்கின்றனர் என்று விளங்கி, அழைக்காதீர்கள். ஷிர்க்கு வந்து விடும் என்று சொல்லி (தொலைவிலுள்ளவர்கள், அருகாமையிலுள்ளவர்கள்) எல்லோருக்கும் (எதையும்) கேட்க வைக்காதீர்கள்.

எவ்விதம் தொலைவிலுள்ள சப்தத்தை கேட்பது இறைவனின் இலட்சணமாக (உங்கள் சொல்படி) இருக்கின்றதோ அவ்விதமே தொலைவிலுள்ளவற்றை பார்ப்பதும் தொலைவிலுள்ள மணத்தை நுகர்வதும் இறைவனின் இலட்சணங்கள் தானே.

'இறை நேசச் செல்வர்களான அவ்லியாக்களுக்கு தொலை தூரம், சமீபம் இரண்டும் ஒன்றுதான்' என்று இல்முல் கைபு, ஹாழிர், நாழிர் பற்றி பேசும்போது ஊர்ஜிதப்படுத்தி இருக்கும்போது தொலைவு, சமீபத்திலுள்ளவற்றை எப்படி ஒரே விதமாக பார்த்துக் கொண்டிருக்கிறார்களோ அவ்விதமே தொலைவு, சமீபத்திலுள்ள சப்தத்தை –அழைப்பை அவர்கள் காதுகள் கேட்கின்றன என்றால் எங்ஙனம் ஷிர்க்கு வரும்?

இத் தன்மைகள் அவர்களுக்கு அல்லாஹ்வினால் அருளப்பட்டவைகள் (அல்லாஹுக்கு இவைகள் சுயமாக உள்ளவை, கொடுக்கப்பட்டவையும் (அதாயியும்) சுயமாக உள்ளவை (தாத்தியும்) எங்ஙனம் ஒன்றுபோல் ஆகும்?

ஒன்றானால் அல்லவா ஷிர்க் வரும்?

தொலைவான சப்தங்களை நபிமார்கள், வலிமார்கள் கேட்கின்றனர் என்பது பற்றி இதோ (சிலவற்றை) எடுத்துக் காட்டுகிறோம்! பாரீர்!!

ஹழ்ரத் யஃகூபு அலைஹிஸ்ஸலாம் அவர்கள் 'கன்ஆன்' என்னுமூரில் இருந்து கொண்டு (மிக தொலைவிலுள்ள மிஸ்ரு நாட்டில் இருந்து கொண்டு வரப்படும்) யூசுப் அலைஹிஸ்ஸலாம் அவர்களது சட்டையின் மணத்தை நுகர்ந்துள்ளார்கள்.

'யூசுபின் மணத்தை நான் நிச்சயம் நான் பெறுகிறேன் (12-94) என்றும், யஃகூபு அலைஹிஸ்ஸலாம் சொன்னார்கள். சொல்லுங்கள் இதுவும் 'ஷிர்க்' தானா?

ஹழ்ரத் உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் மதீனா நன்னகரிலிருந்து கொண்டே 'நிஹாவந்து' என்னும் இடத்தில் போர் செய்து கொண்டிருந்த படைத் தளபதி ஸாரியா ரலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு ( யா ஸாரியா யா அல்ஜபல் என) எச்சரிக்கை விடுத்துள்ளார்கள்' (மிஷ்காத் 546)

உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களது கண், தொலைவிலுள்ள காட்சியை கண்டது என்றும், ஸாரியா ரலியல்லாஹு அன்ஹு அவர்களது காது தொலைவிலுள்ள சப்தத்தை கேட்டது என்றும் இந்நிகழ்ச்சி உறுதி செய்கிறது.

ஹழ்ரத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் இறையில்லம் கஃபத்துல்லாவை கட்டியதும் (அபூகுபைஸ்) மலையின் மீது ஏறி, எல்லா ஆன்மாக்களையும் முன்னோக்கி, அல்லாஹ்வின் அடியார்களே! (அல்லாஹ் ஹஜ்ஜை கடமையாக்கியுள்ளான், ஹஜ் செய்யுங்கள்) என்று கூவி அழைத்தார்கள். கியாம நாள் வரையிலும் படைக்கப்படுகின்றவர்கள் அனைவரும் அவ்வழைப்பை கேட்டனர்.

எவர்கள் 'லெப்பைக்' என்று சொல்லி பதிலளித்தார்களோ அவர்கள் நிச்சயம் ஹஜ் செய்தே தீருவார்கள். எவர்கள் மௌனமாக இருந்தார்களோ அவர்களுக்கு ஹஜ் செய்ய ஒருபோதும் முடியாது போய்விடும்' என்று தப்ஸீர்களில் 22-27 வசனத்தின் கீழ் விவரிக்கப்பட்டுள்ளது.

தொலைவிலிருந்து கேட்டனர் என்பது ஒரு பக்கம் இருக்கட்டும், படைக்கப்படுவதற்கு முன்னரேயே அனைவரும் ஹழ்ரத் இப்றாஹீம் கலீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களது அழைப்பை கேட்டுள்ளனரே! அப்படியானால் இதுவும் ஷிர்க்தானா? சொல்லுங்கள்.!

இவ்வாறே இப்றாஹீம் நபி அலைஹிஸ்ஸலாம் அவர்கள் இறைவன் சமூகத்தில், இரட்சகனே! மரணித்தவர்களை எப்படி நீ உயிராக்குவாய்? என்பதை எனக்கு காட்டுவாயாக! என வினவினார்கள். அது போழ்து நான்கு பறவைகளை அறுத்து அவைகளின் கறியை நான்கு மலைகள் மீது வைத்து 'தும்மத் ஊஹுன்ன – யஃதீனக - ஸஃயன் - பின் அவைகளை அழையும், அவைகள் (உயிர் பெற்று) விரைந்து உம்மிடம் வரும்' என்று கட்டளையிட்டான். (அவ்வாறே அறுத்தார்கள், பின் அழைத்தார்கள்.)

அறுக்கப்பட்ட – உயிரற்ற பறவைகள் அழைக்கப்படுகின்றன. அப்போது அவைகளும் ஓடிவருகின்றன என்றிருக்கும்போது, அவ்லியாக்கள் இந்த பறவைகளை விடவும் அற்பமானவர்களா என்ன? இன்றும் கூட நடைமுறையில் ஒருவன் இந்தியாவில் இருந்து கொண்டு தொலைபேசி மூலமாக லண்டனிலுள்ளவனோடு உரையாடுகிறான். நமது இப்பேச்சை லண்டனிலுள்ளவன் தொலைபேசி மூலம் கேட்கிறான் என்று விளங்கித்தான் -

அறிந்துதான் அழைக்கிறான்.

இவ்வழைப்பு ஷிர்க் இல்லை என்றிருக்கும்போது, ஒரு முஸ்லிம் தொலை பேசியின் திறனைக் காண நுபுவ்வத்தின் திறன் பன்மடங்கு வலுவானதினால் நபிமார்கள் அல்லாஹ்வினால் கொடுக்கப்பட்ட இந்த வல்லமையால் எல்லா அழைப்பின் சப்தத்தையும் கேட்கின்றனர் என்று நிர்ணயம் கொண்டு 'யாரஸூலல்லாஹ் - அல் இயாத் - இறைத்தூதரே! இரட்சிப்பு' என்று அழைத்தால் எங்ஙனம் ஷிர்க் ஆகும்?

ஹழ்ரத் சுலைமான் நபி அலைஹிஸ்ஸலாம் அவர்கள் ஒரு காட்டில் பிரயாணம் செய்து கொண்டிருக்கும்போது சிற்றெறும்பின் சப்தத்தை தெலைவிலிருந்து கொண்டே கேட்டுள்ளார்கள். அந்த (தலைமை) சிற்றெறும்பு சொல்கிறது:

'யா அய்யுஹல் நம்லு ......... எறும்புகளே! உங்களது குடியிருப்புகளுக்குள் நுழைந்து கொள்ளுங்கள். சுலைமாநும் அவரது படையினரும் அவர்கள் அறியாவண்ணம் உங்களை மிதித்து விட வேண்டாம். (அல்குர்ஆன் 27-18)

'சிற்றெறும்பின் இக்கூற்றை மூன்று மைல்களுக்கு அப்பால் இருந்துகொண்டு சுலைமான் நபி அலைஹிஸ்ஸலாம் கேட்டார்கள் என்று இவ்வசனத்தின் கீழ் தப்ஸீர் ரூஹுல் பயான் மற்றும் இதர தப்ஸீர்களில் எழுதப்பட்டுள்ளது. சின்னஞ்சிறு எறும்பின் உரையாடல் சப்தத்தை மூன்று மைல் தூரத்திற்கப்பாலிருந்து கேட்க முடிகிறது. இதனை ஷிர்க் என்று சொல்வார்களா?

'மரணித்தவர்களை அடக்கம் செய்தபின் ஜனங்களின் காலோசையை மரணித்தவர்கள் கேட்கின்றனர். ஜியாரத் செய்பவர்களை பார்க்கின்றனர் அவர்கள் இனம் தெரிந்து கொள்கின்றனர் இதனால் மண்ணறைகளுக்கு சென்று மரணித்தவர்களுக்கு சலாம் சொல்லுவது வேண்டற்பாலது என்று மிஷ்காத் எனும் நூலில் 'கப்ரின் வேதனையை தரிபடுத்துதல்' எனும் பாடத்தில் கூறப்பட்டுள்ளது.

மண்ணறைக்குள் இருந்து கொண்டு இவ்வளவு மெல்லிய (நடப்பவர்களது கால்) ஒலியை கேட்பதானது எவ்வளவு தூரத்தில் இருந்து கேட்பதாகும். சொல்லுங்கள்! இதுவும் ஷிர்க்குதானா?

'இறைநேசச் செல்வர்கள் இறையோனின் வல்லமையால் பார்க்கின்றனர், கேட்கின்றனர், நுகர்கின்றனர், இவ்வல்லமைகளை அல்லாஹ் அவர்களுக்கு நல்கியிருக்கிறான் என்று மிஷ்காத் - கிதாபுத் தஃவத் என்பதிலிருந்து ஒரு ஹதீதை மேற்கோள் காட்டி நாம் இறையன்பர்களுக்கு மறைவானவற்றைப் பற்றிய அறிவு இருக்கிறது என்பது பற்றி பேசும்போது வரைந்திருக்கிறோம். அதுபோழ்து அவர்கள் தொலைவிலிருந்துக் கொண்டு கேட்பது ஷிர்க்காகுமா?

'எப் பெண்ணாவது தன் கணவனுடன் சண்டையிட்டுக் கொண்டால், சொர்க்கத்தில் இருந்து கொண்டு ஹூருல்ஈன் எனும் சுந்தரிகள் அப்பெண்ணை சபிக்கின்றார்கள், என்று திவ்விய ஹதீதில் வந்துள்ளது.

வீட்டின் அறைக்குள் நடக்கும் சண்டையைக் கூட இ;வ்வளவு தொலைவிலிருந்து கொண்டு ஹூருல்ஈன் மங்கள சுந்தரிகள் பார்க்கின்றனர், சப்தத்தை கேட்கின்றனர். மனிதனின் முடிவு நல்ல முடிவாகுமா? (அல்லவா?) என்பது பற்றிய மறைவான சங்கதிகளையும் அறிகின்றனர். ரேடியோ, டெலிவிஷன் மூலம் தொலைவிலுள்ளவற்றை கேட்கின்றனர், பார்க்கின்றனர் என்றிருக்கும்போது நூருன்னுபுவ்வத் - வல்விலாயத் - நபித்துவ, வலித்துவ அருள் ஜோதி இந்த மின் இயக்க சக்தியை விடவும் குறைவானதா? என்ன? பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மிஃராஜ் - விண்ணுலக பயணத்தின் போது, சொர்க்கத்தில் ஹழ்ரத் பிலால் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் காலடி ஓசையை கேட்டார்கள். அதுபோழ்து ஹழ்ரத் பிலால் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் விண்ணுலக பயணத்தை மேற் கொண்டிருக்கவில்லை. மண்ணுலக வீட்டில் இருந்தார்கள்.

தஹஜ்ஜுத் தொழுகைக்காக அங்குமிங்கும் சுற்றிக் கொண்டிருந்திருப்பார்கள்.

இங்கிருக்கும் இவர்களது காலடியோசை அங்கு சொர்க்கத்தில் கேட்கின்றது.

ஹழ்ரத் பிலால் அவர்கள் சூக்கும உடல் எடுத்து அங்கு சென்றிருந்தார்கள் என்றால், (நாம் கூறி வருகின்ற) 'ஹாழிர், நாழிர்' என்பது ஊர்ஜிதமாகிவிட்டது. இவைகள் அனைத்தையும் நம் பிரதிவாதிகள் 'அல்லாஹ் கேட்க வைத்தான். அவர்கள் கேட்டுக் கொண்டார்கள்' என்று சொல்வார்கள்.

ஆம்! நாமும் இதையேதான் சொல்கின்றோம். நபிமார்கள், வலிமார்களுக்கு தொலைவிலுள்ள சப்தங்களை அல்லாஹ் கேட்க வைக்கும்போது இவர்கள் கேட்கின்றார்கள்.

இறைவனுக்கு இத்தன்மை தாத்தி – சுயமானது. அவர்களுக்கு அதாயி – அல்லாஹ்வினால் கொடுக்கப்பட்டது. இறைவனுக்கு அது கதீம் பூர்வீகமானது. இவர்களுக்கோ இது ஹாதிது – புதிதானது.

இறைவனுடைய இத்தன்மை எவருடைய கரத்துள்ளும் அடங்கியதில்லை. ஆனால் இவர்களுக்கான இத் தன்மையோ அல்லாஹ்வின் கைப்பிடியினுள் அடங்கியது.

காது மற்ற உறுப்புகளின்றி அல்லாஹ் கேட்கிறான். இவர்கள் காதினால் கேட்கின்றனர். இந்த அளவுக்கு பாகுபாடு இருக்கும்போது ஷிர்க் -இணைவைத்தல் எப்படி ஏற்படும்?

'யாரஸூலல்லாஹ்!' என அழைப்பது பற்றி இன்னும் அதிகம் சொல்லலாம். எனினும் இத்தோடு முடித்துக் கொள்கிறோம்.

நம் முடிவையும் நல் முடிவாக அமைய அல்லாஹு தஆலா அருள் புரிவானாக! ஆமீன்.

*முற்றும்.*

www.sufimanzil.org